NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu,* p3
**Date:** 1 May 2018

# விரைவான கல்லீரல் புற்றுநோய் சிகிச்சைக்கு புதிய ஆய்வுக்கூடம்

கல்லீரல் புற்றுநோயாளிகளுக்கான சிகிச்சையை மேம்படுத்தும் நோக்கில் புதிய ஆய்வுக்கூடம் ஒன்று அமைக்கப்பட்டு உள்ளது. ‘பர்ப்பஸ்’ திட்டத்தில் அங்கம் வகிக்கும் அந்த ஆய்வுக்கூடம் நேற்று தொடங்கப்பட்டது.

குறிப்பிட்ட கல்லீரல் புற்றுநோயாளி ஒருவருக்கு எந்த மாத்திரைகள் உகந்தவை என்பதைக் கண்டறிய கிட்டத்தட்ட மூன்று, நான்கு மாதங்கள் எடுக்கலாம். ஆனால், அந்த நேரத்தை மூன்று, நான்கு வாரங்களாகச் சுருக்க புதிய ஆய்வுக்கூடம் உதவ முனைகிறது.

‘ஏ–ஸ்டார்’ கழகம், சிங்கப்பூர் மரபணுக் கழகம், சிங்கப்பூர் தேசிய புற்றுநோய் நிலையம், சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம், சிங்கப்பூர் மருத்துவ மன்றம் ஆகியவை இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளன. ஆக அதிக மரணங்களை விளைவிக்கும் புற்றுநோய்களில் கல்லீரல் புற்றுநோய் இரண்டாவது நிலையில் உள்ளது. அந்நோயால் மடிவோரில் 80 விழுக்காட்டினர் ஆசியாவைச் சேர்ந்தவர்கள்.

இத்திட்டத்தின் மூலம் கல்லீரல் புற்றுநோயின் எல்லா நிலை நோயாளிகளுக்கும் இச்சேவை பயனளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.